# மருத நில வேளாண்மையும் பண்ட மாற்று முறையும்

***முனைவர் அ. சதீஸ்குமார்***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொண்டாமுத்தூர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783485

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழர்கள் நிலங்களைத் தன்மைக்கேற்ப ஐந்தாகப் பகுத்துக் கொண்டுள்ளனர். அவற்றில் மருதம் செழிப்பான நிலமாகவும், நாகரிக பண்பாட்டின் தோற்றுவாயாகவும் அறியப்படுகின்றது. எல்லா நிலத்திலும் வேளாண்மை நடந்தாலும், மருத நில வேளாண்மை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேளாண் பொருளாதாரம் அந்நிலத்தில் நடைபெற்றமையாலேயே, செல்வ வளம் பெருகியது. பொருளாதாரத்தில் வளமிக்க நிலமாக அறியப்பட்ட மருத நிலத்தில் பண்ட மாற்று முறைகளும் இருந்துள்ளமையைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *சங்க காலம், திணை, மருதம், வேளாண்மை, பொருளாதாரம், வேளாண் உபரி, பண்டமாற்று.*

**முன்னுரை**

*பண்டையக் காலத்தில் மருதம் செழிப்பான நில இயல்புகளைக் கொண்டிருந்தமையால், வேளாண்மை மரபு சார்ந்த அந்நிலத்தில் நாகரிகப் பண்பாட்டு நிலைகள் வளர்ச்சியுற்றன. நீர்வளமும், குறைவற்ற உணவு உற்பத்தியும், அமைதியான வாழ்க்கை முறைகளும் கலைகளின் பெருக்கத்திற்கும் சுகபோக வாழ்விற்கும் காரணங்களாக அமைந்தன. நிலவுடைமைச் சமுகமாக மருத நிலம் இருந்தமையால் மக்களுக்குள்ள ஏற்றத் தாழ்வுகள் நிலவின. என்றாலும் மருத நிலத்திற்கான பண்பாடு என்பது தனித்துவமானதாகப் பேணப்பட்டுள்ளது. மற்ற நிலத்தில் வேளாண்மை நடைபெற்றிருந்தாலும், மருத நிலப் பொருளாதாரத்தின் மையமாக வேளாண்மையே இருந்துள்ளது. மருத நில வேளாண் பொருளாதாரம் ஆரம்பத்தில் பண்ட மாற்று முறைகளைக் கொண்டிருந்தது. பின்னர்த்தான் பணப் பொருளாதாரமாக மாறியுள்ளது. அந்தவகையில் சங்க கால மருத நில வேளாண்மையையும், அந்நில மக்களிடமிருந்த பண்ட மாற்று முறைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

**மருத நில பொருளாதாரம்**

***சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை (குறள். 1031)***

*என்ற குறளுக்கேற்ப உலகம் பல தொழில்களைச் செய்தாலும், அனைத்துத் தொழில்களும் உழவுத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டு இயங்கும். உற்பத்தியில் பல புரட்சிகள் செய்து பல பொருளாதார முன்னேற்றங்களைக் கண்டாலும், வேளாண் பொருளாதாரமே அனைத்திற்கும் அடிப்படையாகின்றது. ஆகையால், தமிழர்கள் வேளாண்மையை எல்லா காலங்களிலும் போற்றியே வந்துள்ளனர். வள்ளுவரும் அதனாலேயே அனைத்திற்கும் தலையாயத் தொழிலாக உழவைக் குறித்துள்ளார். இங்கு “உழவு” என்றால் வேளாண்மையைக் குறிப்பதாகிறது. இத்தகைய வேளாண்மை என்பது மனிதனின் உணவு தேவையை நிறைவு செய்யும் வாழ்வியல் முறையாகவே தமிழர்கள் கொண்டிருந்தனர். வேளாண்மை உற்பத்திக்கு விலைப் பெறப்படுகிற போதே வேளாண்மை தொழிலாகின்றது. தமிழர்கள் வேளாண்மையை வாழ்வியல் முறையாகக்*

*கொண்டு செய்தனர் என்பதோடு, வணிகமாகவும் மேற்கொண்டுள்ளனர் என்பதைப் பண்டைய இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. வேளாண் உற்பத்திக்கும் வணிகத்திற்குமான தொடர்பை வேளாண்மை பொருளாதாரம் என்கின்றனர். இவ் வேளாண்மை பொருளாதாரத்தை மேற்கொண்டமையாலே மருத நிலம் செல்வத்தில் திழைத்திருந்தது எனலாம்.*

**வேளாண்மை பொருளாதாரம்**

*வேளாண்மை என்பது அடிப்படையான வாழ்க்கை முறை மனிதனின் தேவைக்கு விவசாய உற்பத்தி செய்தலாகும். பொருட்களை மற்றவர்களுக்கு விற்கும் நோக்கில் பயிரிட்டால் அது வணிகம் சார்ந்த தொழிலாகிறது. வேளாண்மை ஒரு கூட்டுப் பொருள் உற்பத்தியாகவே உள்ளமையால் வேளாண்மையில் பல சிக்கல்கள் எழுகின்றன. அதனைப் போக்கி விவசாயப் பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்தி, வணிகம் செய்தலின் வழி இலாபம் ஈட்டுவதையே "வேளாண்மை பொருளாதாரம்' என்பர். ஆஸ்பி (*Ashby*) என்பார், "வேளாண்மையையும் பொருளாதாரத்தையம் ஒன்றாய்ப் பிணைப்பதே வேளாண்மைப் பொருளியலாகும்' என்கிறார். எல்சி.கிரே (*L.V.Gray*) என்னும் அறிஞர், பொதுப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியே வேளாண்மை என்றாலும், வேளாண்மையில் செல்வத்தைப் பெறுதல், செல்வத்தைப் பயன்படுத்துதல் இவற்றிடையே தோன்றும் தொடர்பு பற்றி ஆய்வதே வேளாண்மைப் பொருளாதாதம் என்கிறார். இங்ஙனம் வாழ்வியல் முறையிலிருந்து உற்பத்தி முறைக்கான நிலைக்கு உயரும் வேளாண்மையின் சிக்கல்களை ஆராய்ந்து, செல்வ வளத்தைப் பெருக்குதலை நோக்கமாகக் கொண்டது வேளாண்மை பொருளதாரதம் என்பது விளங்கும்.*

**வேளாண் பொருட்கள் பண்டமாற்று முறை**

*ஒரு நாட்டின் வளம் மருத வேளாண்மையை அடிப்படையாய் அமைந்திருந்தமையால் வேளாண்மைக்கு ஆட்சியாளர்கள் முக்கியத்துவம் அளித்துள்ளனர். மருத நிலத்தைப் பெருக்குவதில் காட்டிய அக்கறையை அதைப் பாதுகாப்பதிலும் காட்டியுள்ளனர்.*

***கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்***
***குடிபுறந் தருநர் பார மோம்பி***
***அழல்சென்ற மருங்கின் வெள;ளி யோடாது***
***மழைவேண்டு புலத்து மாரி நிற்ப***
***நோயொடு பசியிகந் தொரீஇப்***
***பூத்தன்று பெருமநீ காத்த நாடே.***

***(பதி. பா. 13:23-28)***

*மேற்கண்ட பாடலில் உழவர்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் அரசர்களின் கடமையையும் புலவர் பேசியுள்ளார். வேளாண்மையிலிருந்து வரும் வருவாய்தான் அந்நாட்டின் ஆதாரமாக விளங்கிற நிலையில் அதற்குப் பாதுகாப்பு அளிப்பதும் அவசியமாகிறது.*

*வேளாண் உற்பத்தி பொருட்களைப் பண்டமாற்று முறையில் பிற நிலங்களுக்கு அளிப்பதும், நில வரிகளும்தான் அரசின் வருவாய் இருந்தன. வேளாண் பொருட்களின் வழியே பொருளாதார முன்னேற்றம் என்பது ஒரு நாட்டின் சாத்தியமாக மாறிப் போயிருந்த காலமாகச் சங்க காலத்தைக் குறிப்பிடலாம். நெல், மற்றும் கரும்பும் பெரும் வருவாயை அளித்தன. ஏற்றுமதி பற்றியக் குறிப்புகள் காணப்படாவிடனும், ஒரு நாட்டின் உணவு நிறைவு என்பதே அந்நாட்டின் பெரும் செல்வமாகக் கருதப்பட்டது.*

*பண்டைய மருத நில மக்களின் வாழ்க்கை வெற்றியும் வளமும் நிரம்பியது. அவர்கள் தாம் வாழும் நிலத்தின் இயல்பிற்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் எனத் தெரிகின்றது. அவர்களுடைய வாழ்வில் பெரும்பாலும் பண்டமாற்று முறையே நிலவி வந்துள்ளது. பண்டமாற்று முறையோடு குறியெதிர்ப்பு என்ற முறையும் இருந்து வந்துள்ளது. குறிப்பிட்ட ஒரளவு பண்டத்தைக் கடனாகக் கொண்டு ஒரு காலத்திற்குப்*

*பிறகு அதைத் திருப்பிக் கொடுப்பதே இம்முறையாகும். இதனை,*

> ***கரும்பின் கடும்பசி தீர யாழநின்***
> ***நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்***
>
> ***(புறம். பா. 163:3-4)***

*எனும் வரிகளால் அறியலாம். நெல்லும், கரும்பும் மருத நிலத்தின் விளைபொருட்கள். வெற்றிலை, வாழை, மருதம், காஞ்சி, வஞ்சி போன்ற மரங்களும், தாமரை, கழுநீர், ஆம்பல் போன்ற மலர்களும் எருமை, நீர் நாய் போன்ற விலங்குகளும், நீர்க்கோழி, கொங்கு, குயில் முதலிய பறவைகளும் மருத நிலத்தில் காணப்படுபவை. மருத நில மக்கள் உழைப்பை விரும்பி செய்யும் இயல்பினர் என்பது சங்க மருத நிலப் பாடல் வழி அறிய முடிகின்றது. மேலும், அதிகமான புதுவருவாயைத் தரும் நெல்லையும் கரும்பையும் பயிரிட்டமையால் அவர்களின் பொருளாதாரம் மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரமும் வளத்துடன் இருந்துள்ளன. இங்ஙனம் உணவுப் தட்டுப்பாடு இல்லாமல் நிறைவான உயர்ந்த வாழ்க்கையை மருதநில மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை,*

> ***குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்***
>
> ***(பெரும்பாண், வரி : 198)***

*எனும் வரி உணர்த்துகிறது. மருத நிலமே உணவு உற்பத்திக்குக் காரணமான நிலம் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (253-254) பாடல் விளக்குகிறது.*

*உள்நாட்டு வாணிபத்திற்குப் பண்டமாற்று முறை பயன்படுத்தப்பட்டது. நெல்லுக்குப் பதில் உப்பு விற்கப்பட்டது. மோரும், நெய்யும் நெல்லுக்கு மாற்றப்பட்டன. தேனும், கிழங்கும் விற்று மீனும், கள்ளும் பெற்றுக் கொண்டனர். நெய்தல் நிலத்துப் பரதவர் உப்புடன் மருத நிலத்திற்குச் சென்று நெல் பெற்றுக் கொள்வர். குறிஞ்சி நிலத்துத் தேனும் கிழங்கும், நெய்தல் நிலத்து மீனுக்கும் கள்ளுக்கும் விற்கப்பட்டன. இவ்வாறான பண்டமாற்று முறையால் உள்நாட்டுப் பொருளாதாரம் தாராளமாக இருந்தது. (மு. பாலசுப்பிரமணியன், மகிழ்நன், ப. 65)* *என்னும் பகுதியால் வேளாண் பொருளாதாரம் பண்டமாற்று முறையில் என்பதை உணர முடிகின்றது.*

### மீனுக்கு மாற்று

*“கெடிறு’ (கெளுத்தி) என்னும் ஒரு மீனை மருத நில மக்கள் விரும்பி உண்டுள்ளனர். அதிகப்படியாக இருக்கும் கொழுப்பு இம்மீனிற்குச் சுவைத் தரவல்லது. அறுவடைக்குப் பின் விதைக்கப்பட்டிருந்த பயிறு நிறைந்த விளைச்சலை வட்டி முழுதும் நிறைத்துக் கொண்டு, அதனைப் பாணர்களிடம் கொடுத்து பதிலுக்கு ஒரு வட்டி கெளுத்தி மீன்களை வாங்கிச் சமைத்து உண்ட செய்தியை ஐங்குநுறூற்றுப் பாடல் பதிவு செய்துள்ளது.*

> ***முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த***
> ***அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்***
> ***அரிகால் பெரும் பயறு நிறைக்கும் ஊர!***
> ***மாண் இழை ஆயம் அறியும் நின்***
> ***பாணன் போலப் பல பொய்த்தல்லே.***
>
> ***(ஐங். பா. 47)***

*என்னும் பாடலால் அதனை அறியலாம்.*

### முடிவுரை

*சங்க காலம் இயற்கையோடு இயைந்த வாழ்வையும் இயற்கையையும் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஏற்ப மாற்றியமைத்த முயற்சிகளை அடிப்படையாய்க் கொண்ட காலமாக அறிய முடிகின்றது. சங்க நிலவியல் பாகுப்பாட்டில் அனைத்து நிலங்களிலும் வேளாண்மை நடந்தாலும் மருத நிலத்தில் மேற்கொள்ளப்பட்டதையோ உற்பத்தி வேளாண்மையாகக் கொள்ள முடிகின்றது. இயற்கையாக விளைந்தவைகளை உணவுக்குப் பயன்படுத்திக் கொண்டு, வேளாண்மையில் உற்பத்திச் செய்யும் பொருட்களைப் பண்டமாற்று முறையில் விற்பனை செய்துள்ளனர். மேலும், இவையாவும் நில அடிப்படையிலானது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. நன்செய், புன்செய் என்று*

*நிலத்தைப் பாகுப்படுத்தி வேளாண்மை செய்துள்ளனர். நிலப் பாகுப்பாட்டின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை புன்செய் வேளாண்மையையும் மருதம், நெய்தல் நன்செய் வேளாண்மையையும் செய்து தங்களுக்குள் பொருட்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர். இச்சமுதாயத்தில் நன்செய் வேளாண்மை செழிப்புற்றமையால் வேளாண்மை பொருளாதாரம் என்பது இங்கு மருத நில வேளாண்மையையும் உற்பத்தியையும் குறிப்பிடுவதாகிறது.*

**துணைநூற் பட்டியல்**


1. *ஐங்குறுநூறு, பதி. குழு,* NCBH, *சென்னை. 2004.*
2. *குறுந்தொகை, பதி. குழு,* NCBH, *சென்னை. 2004.*
3. *நற்றிணை, பதி. குழு,* NCBH, *சென்னை. 2004*
4. *புறநானூறு, பதி. குழு,* NCBH, *சென்னை. 2004.*
5. *பதிற்றுப்பத்து, பதி. குழு,* NCBH, *சென்னை. 2004.*
6. *பெரும்பாணாற்றுப்படை, பதி. குழு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. 2002*
7. *திருக்குறள், (பரிமேலழகர் உரை) கழக வெளியீடு, சென்னை. 1951.*
8. *மு. பாலசுப்பிரமணியன், மகிழ்நன், பல்லவி பதிப்பகம், ஈரோடு. 2014.*